10ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு - மே-2022

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

## Language - Part - I - Tamil

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்

**குறிப்புகள் :** (i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்புகள் :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை :
அ) குலைவகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. 'ஜெயகாந்தன் சிறுகதை இருக்கிறதா?' என்று நூலகரிடம் விளவுதல்:
அ) அறிவினா ஆ) கொளல் வினா
இ) அறியா வினா ஈ) ஏவல் வினா

3. 'ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வானம்' - என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
அ) காடு ஆ) நாடு
இ) வீடு ஈ) தோடு

4. 'தூசும் துகிரும் ஆரமும் அகிலும்' - இப்பாடலடி இடம் பெற்றுள்ள நூல் :
அ) மணிமேகலை ஆ) தேம்பாவணி
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

5. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது:
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

6. மலர்விழி பாடினாள் - இத்தொடர்:
அ) பொதுமொழி ஆ) தனிமொழி
இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

7. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது - என்ற நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு :
அ) வனத்தில் நடனம் ஆ) மிதக்கும் வாசம்
இ) மொட்டின் வருகை ஈ) காற்றின் பாடல்

8. மெய்கீர்த்தி என்பது :
அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை
ஆ) மன்னர்களின் புகழை ஓலைச்சுவடிகளில் எழுதி வைப்பது
இ) ஒருவரது புகழைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை
ஈ) அறக்கருத்துகள் அடங்கிய நூல்

9. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது:
அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

10. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது :
அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

11. 'கானடை' என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க.
அ) கான் அடை - காட்டைச் சேர்
ஆ) கான் நடை - காட்டுக்கு நடத்தல்
இ) கால் நடை - காலால் நடத்தல்
ஈ) கால் உடை - காலால் உடைத்தல்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."

12. எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும்:
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. செந்தமிழ் என்பது :
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ) தம் தாயை
ஆ) தமிழ் மொழியை
இ) தாய் நாட்டை
ஈ) தம் குழந்தையை

15. வேறார் புகழுரையும் - இத்தொடரில் 'வேறார்' என்பது :
அ) தமிழர் ஆ) சான்றோர்
இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **21–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். [4 × 2 = 8]

**16.** வசன கவிதை - குறிப்பு வரைக.

**17.** விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க..
அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.
ஆ) 1906-ஆம்ஆண்டுவஉ.சிதம்பரனார்ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

**18.** குறிப்பு வரைக - அவையம்.

**19.** “மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!”
- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

**20.** தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.

**21.** ‘முயற்சி’ எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். [5 × 2 = 10]

**22.** சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
அ) இன்சொல் ஆ) எழுகதிர்

**23.** “வாழ்க” பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**24.** இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) விடு - வீடு ஆ) கொடு - கோடு

**25.** வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.

**26.** கலைச் சொற்கள் தருக.
அ) Belief ஆ) Philosopher

**27.** வருகின்றகோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

**28.** சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.
“தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே”

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். [2 × 3 = 6]

**29.** “புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.”
- இது போல் இளம் பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

**30.** உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி ‘அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்’ என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.
அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?
ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?
இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?

**31.** வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **34–க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும் [2 × 3 = 6]

**32.** கம்பராமாயணம் - நூற்குறிப்பு வரைக.

**33.** தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

**34.** அடிபிறழாமல் எழுதுக.
அ) “அன்னை மொழியே” - எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.
ஆ) “நவமணி வடக்க யில்போல்” எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

**35.** தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பகுதியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

**36.** தீவக அணியை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.

**37.** கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [5 × 5 = 25]

**38.** அ) கருணையின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

**அல்லது**

ஆ) ‘காலக்கணிதம்’ கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக.

**39.** அ) பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

**அல்லது**

ஆ) உங்கள்தெருவில்மின்விளக்குகள்பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**40.** படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



**41.** வீட்டு எண் : 21, வ.உ.சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றிச்செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக் கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

**42.** அ) இன் சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக. **அல்லது**

ஆ) மொழிபெயர்க்க :

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colorful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான** விடையளிக்கவும் [3 × 8 = 24]

**43.** அ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக. **அல்லது**

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத் திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**44.** அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறு கதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக. **அல்லது**

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கு அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**45.** அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - சாலைப்பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

**அல்லது**

ஆ) குறிப்புகளைக் கொண்டு, 'மக்கள் பணியே மகத்தான பணி' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை - தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - பொதுவாழ்வில் தூய்மை - எளிமை - மக்கள் பணியே மகத்தான பணி - முடிவுரை.

☆ ☆ ☆

## விடைகள்

1. ஆ) மணி வகை
2. ஆ) கொளல் வினா
3. அ) காடு
4. ஈ) சிலப்பதிகாரம்
5. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
6. இ) தொடர்மொழி
7. ஈ) காற்றின் பாடல்
8. அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் பொறிக்கப்படுபவை
9. ஆ) வேற்றுமை உருபு
10. ஈ) சிலப்பதிகாரம்
11. ஈ) கால் உடை - காலால் உடைத்தல்
12. இ) எம் + தமிழ் + நா
13. அ) பண்புத்தொகை
14. ஆ) தமிழ் மொழியை
15. இ) வேற்றுமொழியினர்
16. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படுகிறது. ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்றழைக்கப்படும். இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தைச் சுலபமாகக் கையாண்டுள்ளார். இந்த வசன கவிதையே பின்னாளில் புதுக்கவிதை உருவாகக் காரணமாயிற்று.
17. அ) ம.பொ.சி. இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?
    ஆ) 1906 ஆம் ஆண்டு வ.உ.சி. யாருக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்.
18. (i) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
    (ii) 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு.
    (iii) உறையூரிலிருந்த அறஅவையம் தனிச் சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.
    (iv) மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது
    (v) மேலும் அங்குள்ள அவையம் 'துலாக்கோல் போல நடுநிலைமிக்கது' என்கிறது.
19. (i) சீவகசிந்தாமணி (ii) வளையாபதி (iii) குண்டலகேசி
20. (i) நெல், கத்தரி - நாற்று
    (ii) மா, புளி, வாழை - கன்று
    (iii) வாழையின் இளநிலை - குருத்து
    (iv) தென்னையின் இளநிலை - பிள்ளை.
21. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
    இன்மை புகுத்தி விடும்.
22. அ) இன்சொல் - பண்புத்தொகை
    இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.
    ஆ) எழுகதிர் - வினைத்தொகை
    கன்னியாகுமரியில் காலைவேளை தோன்றும் கவினுற எழுகதிரைக் காண்பதற்கு வந்திருந்தனர்.
23. வாழ்க - வாழ் + க
    வாழ் - பகுதி, க - வியங்கோள் வினைமுற்று.
24. அ) நாம் **விடு**கின்ற ஒவ்வொரு பட்டமும் **வீடு**கள் மீது விழுகிறது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



ஆ) மாணவர்களே! நீங்கள் **கொடு**க்கும் விடைகளுள் முக்கியமான வார்த்தையை அடிக்**கோடு** போட்டுக் காட்டுங்கள்.

25. அ) வெண்பா - செப்பலோசை
ஆ) ஆசிரியப்பா - அகவலோசை

26. அ) Belief - நம்பிக்கை
ஆ) Philosopher - மெய்யியலாளர்

27. (i) இத்தொடரில் வருகின்ற, செல்கிறேன் என்பன நிகழ்காலத்தைக் குறிக்கும் சொற்கள்.
(ii) 'வரவிருக்கின்ற', 'செல்லவிருக்கிறேன்' என்று எதிர்காலத்தைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக 'வருகின்ற' 'செல்கின்ற' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

28. "தே**னி**லே **ஊறி**ய செந்தமிழின் - சுவை
தே**றும்** சிலப்பதி கா**ர**மதை
**ஊனி**லே எம்முயிர் **உள்ளள**வும் - நிதம்
ஓதி **யுண**ர்ந்தின் **புறு**வோமே"

29. (i) கண்ணன் வயலில் **நெல் நாற்றிற்குத்** தண்ணீர் பாய்ச்சினான்.
(ii) தாத்தா **தென்னம்பிள்ளை** வாங்கி வந்தார்.
(iii) **மாங்கன்று** மழைக்குப் பிறகு தளிர் விட்டது.

30. அ) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்கு துணைபுரிந்தன.
ஆ) அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு.
இ) மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கதாக இருந்தது என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

31. **வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று :**
(i) வறுமையின் காரணமாக ம.பொ.சி. தொடக்கக் கல்வியைக்கூட தொடர இயலவில்லை. ஆனால் அவருடைய அன்னையார் இளமையில் பயிற்றுவித்த பாக்கள் மூலம் இலக்கியப் பயிற்சி பெற்றார்.
(ii) அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களை அவருடைய அன்னையார் பாடும்போது இவரையும் படிக்க வைப்பார். அதனால் சந்தநயம், எதுகை மோனை நயங்களை அறிந்தார். பிள்ளைப்பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். சித்தர் பாடல்களை மனனம் செய்தார்.
(iii) உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.
(iv) சொற்பொழிவுகளைக் கேட்டு இலக்கிய அறிவு பெற்றார். சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வார்.

32. 'இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் ஆகும். வால்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவி தமிழில் கம்பர் எழுதினார். இந்நூல் கம்பராமாயணம் எனப்படுகிறது.' கம்பர் இந்நூலிற்கு 'இராமாவதாரம்' என்று பெயரிட்டார். இந்நூல் ஆறு காண்டங்களை உடையது. படலம் 123, பாடல் 10,500 காண்டங்களின் உட்பிரிவுகள் படலங்கள் ஆகும்.

33. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**
தமிழ்மொழி பழமைக்குப் பழமையாய் உள்ளது. கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து ஆட்சி செய்தது. பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது. திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது. நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.

34. அ) அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

ஆ) நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

35. (i) மல்லிகைப்பூ - வகை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
**விளக்கம்:** - மல்லிகை ஆகிய பூ - இதில் மல்லிகை என்பது சிறப்புப் பெயர், பூ என்பது பொதுப்பெயர்.
(ii) ஆடுமாடுகளுக்கு - வகை - உம்மைத்தொகை
**விளக்கம்:** - ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச் சொல் மறைந்து வந்துள்ளது.
(iii) தண்ணீர்த்தொட்டி - வகை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
**விளக்கம்: –** தண்ணீரை உடைய தொட்டி, ஐ - 2ஆம் வேற்றுமை உருபு, உடைய - பயன்
(iv) குடிநீர் - வகை - வினைத்தொகை - விளக்கம்: - குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர்
(v) சுவர்க்கடிகாரம் - வகை - ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
**விளக்கம்:** - சுவரில் தொங்கும் கடிகாரம். (இல் - ஐந்தாம் வேற்றுமை உருபு, தொங்கும் - பயன்).

36. தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.
**தீவக அணி வகைகள் :** முதல் நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என்னும் மூன்று வகையாக வரும்.

37.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரைநிரை | கருவிளம் |
| கால/மும் | நேர்நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர்நேர்நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர்நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரைநிரைநேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர்நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

38. **அ)**
**முன்னுரை :** கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்த சூழலில்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிக்கிறது.

**கருணையன் கண்ணீர் :** கருணையன், தன் மலர் போன்ற கைகளைக் குவித்து, "பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினார். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒருசேரப் பொழிந்தார்.

**தாயை இழந்து வாடுதல் :** "என் தாய் தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாய்ந்தேன். ஐயோ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணிப்போன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டதைப் போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே!"

**வழி தெரியாமல் தவித்தல் :** "என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என்னுடைய துயரம். துணையைப் பிரிந்த பறவையைப்போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன். சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்."

**ஏதும் அறியாதவன் :** "நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன், நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன். உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன். காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன். என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு, என்தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே!" என்று கருணையன் அழுகிறார்.

**பறவைகளும் வண்டுகளும் கூச்சலிட்டன :** நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்ததுபோன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினார். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம்வீசும் மலர்களும் மலர்ந்த குளங்கள் தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

**முடிவுரை:** 'மலர்போன்ற கை', மணிபோலக் கூறும் உண்மையான சொல், பயிர் வளர்ந்து நெல்மணிகளைக் காணும் முன் வாடியது போல, பறிக்கப்பட்ட மலரைப் போல, அம்பினால் துளைக்கப்பட்டு ஏற்பட்ட வலியைப் போல், துணையைப் பிரிந்த பறவைபோல், வாய்மையான சொற்களே மழைநீர் எனப் பல உவமைகளையும் உருவகங்களையும் கையாண்டு கவிதாஞ்சலியை நிகழ்த்தியுள்ளார் வீரமாமுனிவர்.

ஆ) **என்னை கவர்ந்த கருத்துக்கள் :**

(i) பணம் படைத்த செல்வர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி, அவர்களின் அச்சுறுத்தலுக்கும் அஞ்சமாட்டேன். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் அச்சுறுத்தலுக்கும் அஞ்ச மாட்டேன்.

(ii) உலக உயிர்களிடத்து பாசமும் பற்றும் அதிகமாக வைத்தேன். விருப்பமுடைய பொருள்கள் அனைத்தின் மீதும் பற்றுதல் வைப்பேன்.

(iii) என்னிடம் பொருள் இருந்தால், பிறர் பசியை ஆற்றுவேன்.

(iv) மலர்களில் வண்டாக அமர்ந்து, அதில் உறிஞ்சும் தேனை ஊர் மக்களுக்குக் கொடுப்பேன்.

(v) முற்காலத்தில் வாழ்ந்த கம்பன், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் கூறாமல் விட்டுச் சென்ற உண்மைகளை உலகத்தார்க்கு சொல்வதற்கு முயற்சி செய்வேன்.

39. அ) சென்னை - 40
6-5-20XX

அன்புள்ள தாத்தா, பாட்டி

நான் உங்கள் பெயரன் எழுதுவது. நலம் நலமறிய அவா. இன்றைய சூழலில் தங்களை நேரில் வந்து பார்க்க இயலவில்லை. ஊரடங்கு சமயத்தில் நீங்கள் எங்கும் வெளியில் செல்லாதீர்கள். வாரத்திற்கு ஒருமுறை வேண்டியவற்றை வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். வெளியில் செல்லும்போது முகக்கவசம் கட்டாயம் அணிந்து செல்லுங்கள். அடிக்கடி கிருமிநாசினி பயன்படுத்துங்கள்.

கபசுரக்குடிநீர் அருந்துங்கள். சத்தான உணவுகளை உண்ணுங்கள். புரதச்சத்து மிகுந்த உணவுகளை உண்ணுங்கள். பழங்கள் நிறைய சாப்பிடுங்கள். கொரனோ பெருந்தொற்று நம்மை அணுகாமல் பார்த்துக் கொள்வது நம் கையில்தான் உள்ளது.

இங்கு எங்களுக்கு இணையவழியில்தான் பாடம் கற்பிக்கப்படுகிறது. எனக்குப் பள்ளி எப்போது திறப்பார்கள் என்று ஆவலாய் இருக்கிறது. நிலைமை சரியானதும் நாங்கள் அனைவரும் அங்கு வருகிறோம். உடனே பதில் கடிதம் எழுதுங்கள்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
அஅஅஅ

**உறைமேல் முகவரி**
திரு.சிவா
எண்.30, பிள்ளையார் கோவில் தெரு,
வெட்டுவானம், கண்ணகி நகர், வேலூர்.

ஆ) **அனுப்புநர்**
செந்தமிழ்ச்செல்வன்
எண் 20, மாரியம்மன் கோயில் வீதி,
ஆவடி, சென்னை.

**பெறுநர்**
உயர்திரு ஆணையாளர் அவர்கள்,
தமிழ்நாடு மின்வாரியம்
ஆவடி, சென்னை.

வணக்கத்திற்குரிய ஐயா,

**பொருள் :** பழுதடைந்த மின்விளக்குகளை மாற்றித் தருவது பற்றி வேண்டுதல்.

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கின்றேன். எங்கள் பகுதியில் சுமார் 300 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதியில் உள்ள மூன்று தெருக்களில், இரண்டு மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இதனால் இப்பகுதி இருள் சூழ்ந்து உள்ளது. இதனால் குழந்தைகள், பெண்கள், படிக்கும் பிள்ளைகள் என இத்தெருவைப் பயன்படுத்துபவர்கள் அல்லல்படுகின்றனர். இவர்கள் போதிய வெளிச்சமில்லாததால் தெருவில் உள்ள மேடுபள்ளம் தெரியாமல் விழுகின்றனர்.

இருட்டான சூழலைப் பயன்படுத்தி, சில திருடர்கள் இரு சக்கர மோட்டார் வாகனத்தில் வந்து, நடந்து செல்லும் பெண்களின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு சென்ற சம்பவங்களும் நடந்துள்ளன.

இத்துன்பங்களின்றி நாங்கள் தெருவில் சென்று வருவதற்கு பழுதடைந்த மின்விளக்குகளை சரி செய்து தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செந்தமிழ்ச் செல்வன்

**உறைமேல் முகவரி**
பெறுநர்
உயர்திரு ஆணையாளர் அவர்கள்,
தமிழ்நாடு மின்வாரியம்
ஆவடி, சென்னை.

40. **பெண்மையைப் போற்றுவோம்**

ஒன்றாய் அமர்ந்துண்டு
ஒற்றுமையைக் காட்டிடுவாள்
உறவுகளுக்கு உணவிட்டு
உன்னதத்தைக் காட்டிடுவாள்
உணவுடன் அன்பையும்
சமைத்து அருகிருந் திட்டிடுவாள்
குடும்பம் செழித்திடவே
குடும்பத்தலைவி உழைத்திடுவாள்
விருந்தோம்பலில் இவளல்லவோ
விருது பெற்றவள்.

41. **மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : 10296 தேதி : 15.6.20xx
வகுப்பும் பிரிவும் : 11-அ

1. மாணவ/ மாணவியின் பெயர் : குணசேகரன்
2. பிறந்த தேதி : 19.5.2004
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் : வெற்றிச்செல்வன்
5. வீட்டு முகவரி : எண் -21, வ.உ.சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டம்.
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 490/500
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு உயர்நிலைப் பள்ளி, நேரு சாலை, காஞ்சிபுரம்.

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப் பெண் (100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 620 085 | தமிழ் | 99 |
| பொதுத் தேர்வு 2022 | | ஆங்கிலம் | 95 |
| | | கணக்கு | 100 |
| | | அறிவியல் | 100 |
| | | சமூக அறிவியல் | 96 |
| | | மொத்தம் | 490 |

42. **அ)**

**இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள்:**
பிறர் மனம் மகிழும்
அறம் வளரும்
புகழ் பெருகும்
நல்ல நண்பர்கள் சேருவர்
அன்பு நிறையும்

**ஆ)** காலை நேரத்தில் பொன்னிறக் கதிரவன் தன் ஒளிமிக்க கதிர்களால் இருளை விரட்டும். பால் வண்ண மேகங்கள் உலவத் தொடங்குகின்றன. வண்ண வண்ணப் பறவைகள் தங்கள் காலை நேரத்தை மெல்லிசையோடு ஆரம்பிக்கின்றன. அழகான வண்ணத்துப்பூச்சிகள் பூக்களைச் சுற்றி நடனமாடும். பூக்களின் மணம் காற்றை நிரப்பும். காற்று மென்மையாய் எங்கும் வீசி அனைத்தையும் இனிமையாக்கும்.

43. **அ)**

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பது குறித்துக் காண்போம்.

**அரசியல் அறம் :** நீர் நிலை பெருக்கம், நிலவளம், உணவுப் பெருக்கம், அரசின் கடமையாக சொல்லப்படுகிறது. அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்ற சங்க இலக்கியம் காட்டும் அறம் இன்றைக்கும் தேவையே.

**இன்றைய தேவை :** நீர்நிலை, நிலவளம், உணவுப் பெருக்கம் குறைந்தால் பஞ்சம், வறுமை ஏற்படும். கையூட்டுப் பெற்றுக் கொண்டு முறை தவறி நீதி கூறினால் நாடு கெடும் என்பதால் அவை இன்றைக்கும் தேவையே.

**போர் அறம் :** சங்க இலக்கியத்தில் கூறப்பட்டதைப் போன்று, வலிமை கொண்ட நாடு, வலிமை, வளம் அற்ற நாடுகளோடு போர் செய்தலைத் தவிர்க்க வேண்டும். இயற்கை, விலங்கு, மனிதம் காக்கப்பட வேண்டும்.

**வணிகம் :** வணிகத்தில் கூடுதல் விலை, கலப்படம், தரமற்ற பொருள்கள் போன்றவற்றை தவிர்த்து, மக்கள் நலம், வளம் சார்ந்து வணிகம் நடைபெற வேண்டும்.

**உதவி :** பிறர் துன்பம் தீர்ப்பதுதான் உண்மையான செல்வம். தனிநபர், நாடு, அரசியல் அமைப்புகள் போன்றவை வறுமை உற்றோர்க்கும், பிறருக்கும் உதவி செய்து வாழவேண்டும்.

**ஆ)** **முன்னுரை:** சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா பொருள்வளம், சுவைவளம், சொல்வளம் என எல்லாவற்றிலும் குறையே காணமுடியாத மொழி, தமிழ்மொழி இதன் சிறப்பை, சில சொற்களின் உருவாக்க அடிப்படையில் கண்டு வியக்கலாம். இங்குத் தமிழின் சொல்வளம், சொல்லாக்கத்திற்கான தேவை குறித்து உரைக்குறிப்புகளைக் காணலாம்.

**சொல்வளம் :** தமிழ்நாட்டுப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர்கள். எத்துணையோ மொழிகளினின்று கடன் கொண்ட ஆங்கில மொழியிலும், நூலிலும் இலையைக் குறிக்க Leaf என ஒரே சொல் மட்டுமே உள்ளது. ஆனால் தமிழ் மொழியில் அதன் வன்மை, மென்மையின் அடிப்படையில் தாள், இலை, தோகை, ஓலை எனத் தமிழர் பாகுபாடு செய்துள்ளனர். தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒரு பொருட் பலசொல் வரிசைகள் பிறமொழிகளில் இல்லை. தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல்.

**சொல்லாக்கத்திற்கான தேவை :** திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்ள வேண்டும். அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்ட புதிய சொற்களுக்கான கலைச்சொல் வளத்தைப் பறை சாற்றுதல் அவசியமாகும். தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்கவும், தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் வேண்டுமாயின் புதிய சொல்லாக்கம் தேவை. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும். நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கருவிகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைகளுக்குப் பயன்படும் சொற்களைத் தமிழில் சொல்லாக்கம் செய்து நம் மொழியின் வளத்தைப் பெருக்க வேண்டும்.

44. **அ)**

**முன்னுரை :** அன்பை வெளிப்படுத்த அறிமுகம் தேவையா என்ன... அழகான சிறு உள்ளம் போதுமே. துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது. எப்படிப்பட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. துணையே இல்லாதவர் என்று கருதி நாம் அலட்சியம் செய்பவருக்கும் துணையொன்று இருப்பதை அறிய முடிகிறது. மனிதநேயம் மிக்க மனிதர்கள் எக்காலத்தும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த வகையில் கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' என்ற சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர்கள் குறித்துக் காண்போம்.

**வீரப்பன் :** குப்புசாமியின் உயிர் நண்பன் வீரப்பன். வீரப்பன் கட்டட மேஸ்திரியாக கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளி. குப்புசாமி, தாய்மாமன் வீட்டில் தங்கியிருந்தபோது நோய் காரணமாக வேலையை இழந்துவிட்டான். தாய்மாமன் வீட்டில் அவனை சரியாகக் கவனிக்கவில்லை. அதனால் துன்பப்பட்ட குப்புசாமியை அழைத்து வந்து, சாப்பாடு போடுவான். குப்புசாமி காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு தன் சித்தி வீட்டிற்கு வந்த பின்பும் வீரப்பன் அவனை மறக்கவில்லை. சென்னைக்கு ஒரு வேலையாக வந்த ஆறுமுகத்திடம் ஒரு கடிதத்தையும் மூன்று ரூபாயையும் குப்புசாமிக்காக கொடுத்தனுப்புகிறான். அந்தக் கடிதத்தில் அவன் எழுதியிருந்த செய்திகள் வீரப்பனின் மனிதத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது. அக்கடிதத்தில், குப்புசாமி ஊரைவிட்டு போனது தன் உயிரே போய்விட்டது போல இருந்தது என்று கூறுகிறான். மேலும் குப்புசாமிக்காக தினமும் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவதாகவும் எழுதியிருந்தான். கடன் வாங்கி மூன்று ரூபாய் கொடுத்தனுப்பியுள்ளதாகவும், நேரில் வருவதைவிட, பஸ்ஸூக்கு ஆகும் செலவு குப்புசாமிக்கு உதவியாக இருக்கும் என்பதால் பணத்தைக் கொடுத்துவிட்டதாகவும் எழுதியுள்ளான். வேறு இடத்தில் கேட்டிருக்கும் கடன் தொகை கிடைத்தால் நேரில் பார்க்க வருவதாகவும் எழுதியிருந்தான். இக்கடிதம் வீரப்பனின் மனிதநேயத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை. மனிதநேயம் இல்லாமல் இருந்த, தங்கவேலுவின் பக்கத்து வீட்டு நபரையும் மனம் மாறச் செய்தது.

**ஆறுமுகம் :** குப்புசாமி வேலை செய்த சைக்கிள் கடைக்கு எதிரேயிருந்த விறகுக் கடை ஒன்றில் கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளிதான் ஆறுமுகம். வீரப்பன் அளவிற்கு குப்புசாமியிடம் நட்பு இல்லை என்றாலும் ஓரளவு அறிமுகம் ஆனவன். குப்புசாமியை மருத்துவமனையில் சேர்த்த செய்தியை அறிந்தவுடன், தன் பிள்ளைகளுக்காக வாங்கியிருந்த நான்கு சாத்துக்குடிப் பழங்களில் இரண்டையும், ஒரு ரூபாயையும் கொடுத்து குப்புசாமியிடம் சேர்த்துவிடச் சொன்னான். வீரப்பன் கொடுத்தவற்றை மட்டும் கொடுத்துவிட்டு போயிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்வதற்கு அவனுள் இருந்த மனிதநேயம் இடம் கொடுக்கவில்லை.

**முடிவுரை :** அடுத்தவர்களின் வலிகளை உணர்வுகளால் உணரத் தொடங்கும் போதுதான் பிறக்கிறது மனிதநேயம்.இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால், கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பை செலுத்த இயலும் என்று அன்னை தெரசா கூறியது போல வீரப்பன், ஆறுமுகம் ஆகிய இரு கதைமாந்தர்களிடம் மனிதம் வெளிப்பட்டு நிற்பதை இக்கதையின் வாயிலாக உணர முடிகிறது.

**ஆ)** **முன்னுரை:** உப்பிட்டவரை உள்ளளவும் நினை கிராமத்து மக்களின் விருந்தோம்பல் மனதிற்குள் எப்போதும் பசுமையாக இருக்கும். அவர்களது இயல்பான வரவேற்பும் எளிமையான உணவும் நமது மனதின் களைப்பையும் உடலின் களைப்பையும் மறக்கடிக்கச் செய்யும். இக்கதையில் இருப்பதை பகிர்ந்து கொடுக்கிற நேசம் அன்னமய்யாவிடம் காணப்படுகிறது. அவரின் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை இக்கதையில் காண்போம்.

**அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் :** அன்னமய்யாவுடன் வந்தவன் தாடியும் அழுக்கு ஆடையும் தள்ளாடிய நடையுடனும் காணப்பட்டான். அந்தப்பக்கம் வந்த அன்னமய்யா அவ்வாலிபனை அருகில் சென்று பார்த்தான். பசியால் வாடிய முகம், முதியவரைப் போலவும், சாமியாரைப் போலவும் காணப்பட்டான்.

**அன்னமய்யாவின் விசாரிப்பு :** அன்னமய்யாவைப் பார்த்து அவன் மென்மையாகச் சிரித்தான். அவன் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். அவன் பேசியதில் மகிழ்ச்சியடைந்த அன்னமய்யா அருகிலிருந்து நீச்சுத் தண்ணி வாங்கி வந்து கொடுத்தான்.

**வாலிபனின் பசியைப் போக்கினான் :** ஒரு வேப்பமரத்தின் அடியில் ஏகப்பட்ட மண்கலயங்கள் கஞ்சியால் நிரப்பப்பட்டிருந்தன. சிரட்டையைத் துடைத்து அதில் நீத்துபாகத்தை அவனிடம் நீட்டினான். அக்கஞ்சியை உறிஞ்சியபோது அவனுக்குக் கண்கள் சொருகின. மிடறு தொண்டை வழியாக இறங்குவதன் சுகத்தை முகம் சொல்லியது. "உட்கார்ந்து குடிங்க" என்று உபசரித்தான். அவன் கஞ்சியைக் குடித்துவிட்டு வேப்பமரத்து நிழலில் உறங்கினான். வந்தவனின் மனநிறைவுக்கு மேலான ஒரு நிறைவு அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. பால் குடித்துக் கொண்டிருக்கும் குழந்தையைப் பார்ப்பது போல அவனைஒரு பிரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான் அன்னமய்யா.

**அன்னமய்யா – பெயர்ப் பொருத்தம் :** தொலைவிலிருந்து வந்த அந்த வாலிபன் படுத்துக்கொண்டே உங்கள் பெயரென்ன?" என்று கேட்டான். அதற்கு உங்கள் பெயரென்ன என்று கேட்டதற்கு இவர் "அன்னமய்யா" என்று கூற, வந்தவன் அந்தப் பேரை மனதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். எவ்வளவு பொருத்தம் என்று நினைத்துக் கொண்டான். எனக்கு இன்று நீ இடும் அன்னம் தான் இன்று என் உயிரைக் காப்பாற்றியது என்று அந்த வாலிபன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

**முடிவுரை :** தானத்தில் சிறந்தது அன்னதானம் கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் பாராட்டப்பட்ட கி.ராஜநாராயணன்

எழுதிய இக்கதையில், அன்னமய்யா என்ற பெயருக்கும் அவரின் செயலுக்கும் சிறந்த பொருத்தமாக அமைந்துள்ளது என்பது உண்மை, நாமும் அன்னமய்யாவைப் போலப் பசியால் வாடுவோர்க்கு பசியைப் போக்க உதவுவோம்.

45. **அ)**

**முன்னுரை :** ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்கள் மூலமாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் சாலைவிபத்துகள் பற்றிய செய்திகளை நாம் அறிய முடிகிறது. இக்கால கட்டத்தில் சாலை விபத்துகள் மிக அதிக அளவில் நடைபெறுகின்றன. இதனால் எண்ணற்ற உயிர்கள் பலியாகின்றன. உடலின் உறுப்புக்களை இழந்து தவிப்போர் எண்ணிக்கையும் அதிகமாகிவிட்டது. இதற்கெல்லாம் சாலைவிதிகளை நாம் மதிக்காமல் நடப்பதே காரணமாகும்.

**சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு :** "தலைக்கவசம் நமக்கு உயிர்க்கவசம்" இரு சக்கர வாகன ஓட்டிகள் தவறாமல் தலைக்கவசம் போட்டுக் கொண்டு வாகனங்களை ஓட்ட வேண்டும். போக்குவரத்துக் காவல்துறையினரின் கட்டளையைமீறி நாம் செல்லக்கூடாது. வாகனங்களில் அதிவேகம் இருக்கக் கூடாது. வாகனம் ஓட்டுபவர்களுக்கென கூறப்பட்டுள்ள சாலைவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். சாலையில் அந்தந்த வாகனங்களுக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்ட கூடாது. சாலையில் பாதுகாப்புடன் வாகனங்களை இயக்கி உயிர்பலியை தவிர்ப்போம்.

**சாலை விதிகள் :** சாலையில் விபத்துகள் நேரிடா வண்ணம் தடுப்பதற்காக, போக்குவரத்துக் காவல்துறையினர் பணிசெய்கின்றனர். மேலும் பல இடங்களில் வண்ண விளக்குகள் மூலமாக சாலை போக்குவரத்து நெறிப்படுத்தப்படுகிறது. போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்ப சாலையை பயன்படுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் :** சிவப்பு வண்ண விளக்கு 'நில்' என்ற கட்டளையையும் மஞ்சள் வண்ண விளக்கு 'தயாராக இரு' என்ற கட்டளையையும், பச்சை வண்ண விளக்கு 'புறப்படு' என்ற கட்டளையையும் நமக்குத் தருகிறது. இடது பக்கம் செல்லவேண்டும் என்பது சாலை விதிகளில் முக்கியமானதாகும். பாதசாரிகள், நடப்பதற்கான நடைமேடையில் செல்ல வேண்டும். எதிர்த்திசையில் சாலைகளைக் கடக்கும்பொழுது, அதற்கென கோடு போட்டிருக்கும் இடத்தில்தான் கடக்க வேண்டும்.

**விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் :** இரு சக்கர வாகனங்களில் இருவருக்கு மேல் பயணிக்கக்கூடாது. பேருந்துகளில் பயணம் செய்யும்போது படிக்கட்டுகளில் நிற்கக் கூடாது. வண்டி ஓட்டுபவர்கள் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, கண்டிப்பாக வண்டி ஓட்டக்கூடாது. மதுவருந்திவிட்டு வண்டி ஓட்டுதல் சட்டப்படி குற்றமாகும். எந்தவொரு வண்டியையும் முந்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் செல்லக்கூடாது.

**முடிவுரை :** 'உயிர் விலைமதிப்பற்றது' மனித உயிர் மட்டுமல்ல; பறவைகள், விலங்குகள் என்று அனைத்து உயிர்களுமே விலை மதிப்பற்றவை. சாலை விபத்தின் போது அந்த ஜீவன்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே சாலை விதிகளை நாம் பின்பற்றி நடக்க வேண்டும். "சாலை விதிகளை மதிப்போம் விலை மதிப்பில்லா உயிரைக் காப்போம்."

**ஆ)** **முன்னுரை :** இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட எண்ணற்ற பாரத மைந்தர்களுள் வ.உ.சிதம்பரனார் மிக முக்கியமான ஆளுமை ஆவார். அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழகம் தந்த தவப்புதல்வர் :** எட்டையபுரத்துக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் 1872ஆம் ஆண்டு மகனாகத் தோன்றினார். தன் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் திருச்சி சென்று சட்டம் பயின்று வழக்கறிஞரானார்.

**நாட்டுப்பற்று :** நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அவர் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு நாட்டு விடுதலைக்காகப் பணியாற்ற, தன்னை விடுதலை இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். பாலகங்காதர திலகரின் வழியில் சென்ற வ.உ.சி அவர்கள் தமிழகத்தில் விடுதலைப் போரைத் தீவிரப்படுத்தினார். சுப்பிரமணிய சிவா, பாரதியார், வாஞ்சிநாதன் போன்றோர் வ.உ.சியின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தனர். தன் பேச்சுக்களாலும் எழுத்துகளாலும் மக்கள் மனதில் விடுதலை உணர்வைத் தூண்டினார். சுதேசி இயக்கத்தை வளர்த்து அந்நியப் பொருள்கள் மற்றும் துணிகளை எரித்தார். உள்நாட்டுப் பொருள்களை வாங்குமாறு மக்களை ஊக்கப்படுத்தினார். ஆங்கிலேயரின் கடல் வாணிபத்தை அழிக்க வேண்டும் என்று எண்ணிய வ.உ.சி அவர்கள் கடும் முயற்சிகளைத் தாண்டி இரண்டு கப்பல்களை வாங்கி கடல் வாணிபத்தைத் தொடங்கினார். அவர் வெற்றியைப் பொறுக்காத ஆங்கிலேய அரசு அவர்மீது வீண் பழி சுமத்தி இரட்டை ஆயுள் தண்டனை வழங்கியது. சிறையில் கசையடி பெற்றார்; கல்லுடைத்தார்; செக்கிழுத்தார். நம்மை சுதந்திர இந்தியாவில் வாழவைப்பதற்கு அவர் எண்ணற்ற துன்பங்களை அடைந்தார்.

**மொழிப்பற்று :** தாய்நாட்டை எந்த அளவு நேசித்தாரோ அந்த அளவு தாய்மொழியான தமிழையும் நேசித்தார். மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை ஆகிய நான்கு நூல்களை இயற்றியுள்ளார். இன்னிலை, சிவஞானபோதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்), தொல்காப்பியம் (இளம்பூரணர் உரையுடன்) ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். விவேக பானு, இந்து நேசன், தி நேஷனல் ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஜேம்ஸ் ஆலன் என்பவர் எழுதியுள்ள நான்கு நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

**பொதுவாழ்வில் தூய்மை – எளிமை :** பொது வாழ்வில் தூய்மையைக் கடைபிடித்தார். வழக்கறிஞராக அவர் இருந்தபோது ஏழை மக்கள் மீது கொண்ட அனுதாபத்தினால் பலமுறை பணம் வாங்காமல் வாதாடி வெற்றி பெற்றுள்ளார். பணத்திற்காக வாதாடாமல் ஏழைகளுக்காகவும் உண்மைக்காகவும் வாதாடினார். அந்நியத் துணிகளை உடுத்துவதற்கு அனுமதிக்கவில்லை.

**மக்கள் பணியே மகத்தான பணி :** தொழிலாளர் நலனுக்காக உழைத்தார். கோரல் மில் தொழிலாளர்களுக்கு பிரச்சனை ஏற்பட்டபோது, உடனிருந்து உழைத்து அவர்களுக்காகப் பாடுபட்டார். தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். கல்வியறிவைப் பெற முடியாத மாணவர்களுக்கு உதவி செய்து அவர்கள் கல்வி கற்க உதவி செய்துள்ளார். மக்களுக்கு செய்யும் சேவைகள் மகேசனுக்கு செய்யும் சேவைகள் எனக் கருதினார்.

**முடிவுரை :** நாட்டிற்காக, நாட்டு மக்களுக்காக உழைத்த வ.உ.சி அவர்கள் இந்நாடு விடுதலையடைந்த போது உயிருடன் இல்லை. 1936ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று உயிர் நீத்தார். தமிழகம் தந்த தவப்புதல்வனை எண்ணி பாரதத்தாய் கண்ணீர் வடித்தாள்.

☆ ☆ ☆